மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ்.இளங்கோ

16·10·60 : விலை 16 காசு

வள்ளலைக் காத்த வள்ளல்

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 16—10—60 ஒலி 50

சொக்கலிங்கம் வேலை தேர்தலுக்குத் தேவைதானா?

★

"1962-ம் ஆண்டு பொதுத் தேர்தல் வர இருக்கிறது! அப்போது இந்த நாட்டு மக்கள், தங்களுக்காக ஒரு ஆட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்! அதாவது, தங்களுக்கு யார், யார் நன்மைகளைச் செய்வார்களோ, யார், யார் இந்த நாட்டை வளப்படுத்துவார்களோ, யார், யார் இந்த நாட்டின் வறுமையைப் போக்குவார்களோ அவர்களைக் கூப்பிட்டு இந்த நாட்டை ஆளச் சொல்லுவார்கள்—அதற்கேற்ற முறையில் தான் இந்த நாட்டு அரசியல்வாதிகளும் நடந்து கொள்ளுவார்கள்" என்றே நம்பிக் கிடந்தோம்! ஆனால் அந்த நம்பிக்கை நட்சத்திரம் இப்போது பூரணமாக மறைந்து விட்டது!

இந்த நாட்டை, இப்போது ஆண்டு கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசியல்வாதிகள் அந்த நம்பிக்கை நட்சத்திரத்தை அடியோடு மறைத்துவிட்டார்கள்! பொதுத்தேர்தல என்ற புனிதமான வார்த்தைக்கே மாசு கற்பித்து வருகிறார்கள், ஜனநாயகம் என்ற சொல்லுக்கே இழிசெயலை உண்டாக்கி வருகிறார்கள்!

ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டே, அமைச்சர்களாக உட்கார்ந்து கொண்டே, அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டே, இந்த நாட்டு காங்கிரஸ் அரசியல்வாதிகள் தேர்தலில் கலந்து கொள்ளுகிறார்கள்! "இது எந்த நியாயத்தின் அடிப்படையில எழுந்தது" என்று தான் நமக்குப் புரியவில்லை! "இது எந்த ஜனநாயக முறையை ஒத்தது" என்பதும் நமக்குத் தெரியவில்லை!

பதவியைக் காட்டி, அந்தப் பதவிக்குள்ள அந்தஸ்தைக் காட்டி, அந்த அந்தஸ்துக்குள்ள அதிகாரத்தைக் காட்டி, வாய்ப் பொத்தி, கைபொத்திக் கிடக்கும் அதிகாரிகளைக் காட்டி; போலீசைக் காட்டி, அந்த போலீசார் வைத்திருக்கும் துப்பாக்கிகளைக் காட்டி, அந்தத் துப்பாக்கிகள் வீசும் ரவைகளைக் காட்டி, அந்த ரவைகள் குடித்த உயிர்களைக் காட்டி, அந்த உயிர்கள் கொட்டிய ரத்தக் காட்சிகளைக் காட்டி, மக்களை மிரட்டி, அந்த மிரண்ட மக்களிடமிருந்து வோட்டுச் சீட்டுகளை வாங்குவது ஜனநாயகமல்ல—பட்ட பகலில் துணிந்து அடிக்கும் அப்பட்டமான பகற் கொள்ளையாகும்! இதற்காக ஒரு தேர்தலா? அதற்காக கோடிக் கணக்கில செலவா?

மந்திரி காமராஜர் சாதாரண காமராஜராக நின்றால் வோட்டு கிடைக்காதா? கலெக்டர்கள் கைக்கட்டி நிற்க, தாசில்தார்கள் வாய்ப் பொத்தி நிற்க, போலீஸ் படையும், துப்பாக்கி ஜவான்களும், குண்டாந்தடி சேவகர்களும் புடைசூழ பவனி வந்தால்தான் வெற்றிபெற முடியுமா?

மீஞ்சூர் மிராசுதார் பக்தவத்சலத்தால் வெற்றிபெற முடியாது—போலீஸ் மந்திரி பக்தவத்சலத்தால்தான் வெற்றிபெற முடியுமா?

கோவை வழக்கறிஞர் சுப்பிரமணியத்தால் ஜெயிக்க முடியாது — நிதி அமைச்சர் சுப்பிரமணியத்தால் தான் ஜெயிக்க முடியுமா?

பதவியை துறக்காமல், மந்திரி வேலைகளுக்கு ராஜினாமா கொடுக்காமல் தேர்தலிலே நிற்பதற்கு வேறு என்ன காரணம்?

மந்திரியாக இல்லாவிட்டால், டாடாவின் மனம் இறங்காதா? டால்மியாவின் இதயம் இளகாதா? பிர்லாவின் கை நீளாதா? பூண்டியும், உக்கடையும் பூட்டுச் சாவிகளைத் தராதா? ஆலையரசர்களின் அரவணைப்புக் கிடைக்காதா? மந்திரி வேஷம் கலைக்கப்படாமல இருப்பதற்கு வேறு என்னதான் காரணம்?', இதுவா ஜனநாயகம்" என்று நல்லறிவாளர்கள் கேட்கும் கேள்விக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

"ஜனநாயகம், ஜனநாயகம் என்று பேசுகிறீர்களே! அந்த ஜனநாயகம் பேச உரிமையளித்தது யார்—நாங்கள்தானே" என்றுதானே பலர் பேசித் திரிவதாகத் தெரிகிறது!

"வயது வந்தவர்கள் அனைவருக்கும் வாக்குரிமையளித்தது காங்கிரஸ்தான், அந்த வாக்குரிமையாளர்களைக் கொண்டு தேர்தல் நடத்துவதும் காங்கிரஸ்தான்" என்றும் கூறி வருகிறார்களாம்! 'இது ஒரு வரப்பிரசாதம்" என்றுகூட வருணிக்கிறார்களாம்! உலகத்தில் எங்குமே இல்லாத ஒரு உரிமையை இவர்கள் நமக்கு வழங்கி விட்டதாகத் தம்பட்ட மடித்து வருகிறார்கள்! இதை வேறு யாராவது கேட்டால் சிரிப்பார்கள்! வேறு எந்த அந்நிய நாட்டானாவது இதைக் கேட்டால் கைகொட்டி, வாய்விட்டு நகைப்பான்!

இந்த ஜனநாயக முறை இந்த நாட்டில் மட்டும் அதிசயமாக இருக்கவில்லை! இந்த ஜனநாயக முறை ஏறத்தாழ எல்லா நாடுகளிலும் இருக்கின்றது! குடியரசு நாடுகளில் மட்டுமல்ல—முடியரசாக விளங்கும் இங்கிலாந்திலும் இந்த முறை உண்டு! இந்த ஜனநாயக முறை எந்த நாட்டில் இல்லையோ அந்த நாட்டை சர்வாதிகார நாடு என்று வருணிப்பார்கள்! இந்த இருபதாம் நூற்றாண்டில் அந்த சர்வாதிகார முறை மிகக்க கேவலமாகக் கருதப்பட்டு வருகிறது! மிக்கக கீழ்த்தரமாகவும் கருதப்பட்டு வருகிறது! "அது மனித சமுதாயத்திற்கு ஏற்ற முறையுமல்ல, அது மனிதர்களால் கையாளப்படும முறையுமல்ல" என்று அறிஞர் பெருமக்கள் கருதி வருகிறார்கள! அது மட்டுமல்ல, அந்த முறையை இந்த காலத்து மக்கள் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை! இந்த காரணங்களால்தான், காங்கிரஸ்காரர்கள இந்த ஜனநாயக முறையை, இந்த உரிமையை வழங்கி இருக்கிறார்கள்! உலகம் தூற்றுமே என்ற அச்சத்தால்தான, இந்த உரிமையை வழங்கி இருக்கிறார்கள்!

இந்த நாட்டிற்கு ஜனநாயக உரிமையை வழங்குகிறார்களே தவிர, வழங்கியவர்கள் ஜனநாயகவாதிகளா? ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களா என்று கேட்டால் உண்மையிலே கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்!

காங்கிரஸ்காரர்களுக்கு தேர்தல் முறையில் கொஞ்சமும் நம்பிக்கைக் கிடையாது! ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தி வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்குக் கிடையாது!

நாட்டை செழிக்க வைத்து, மக்களை வாழ வைத்து அவர்களுடைய அன்பையும், 'ஆதரவையும் பெற்று, அத்தோடு ஓட்டுச் சீட்டுகளையும் பெற்று நாட்டையாள வேண்டும் என்று எந்த காங்கிரஸ்காரர்களும் எண்ணுவதேயில்லை!

(8ம் பக்கம் பார்க்க).

சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் கேட்டால் 'சோறு கிடைக்குமா' என்று அமைச்சர்கள் கேட்கிறார்கள்!

சோறுதான் வேண்டுமென்றால் அமெரிக்காவிடம் அடிமையாக இருக்கலாமே?

'சென்னை ராஜ்யம்' என்பது இழிவையும், அவமானத்தையும் தருவது!

ஆட்சியாளருக்கு நாவலர் தரும் அறிவுரை!

சென்னை இராயப்பேட்டை திருவள்ளுவர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழாவும், மறைந்த கலையுலக மேதை நகைச் சுவை மன்னன் — கலைவாணர் என், எஸ், கிருஷ்ணன் நூல் நிலையத் திறப்பு விழாவும் இராயப்பேட்டை அம்மன் கோவில் முன்னிலையில் சென்ற 8-10-60ம் தேதி மாலை மேணிக்கு மன்றத்தின் தலைவர், த. பாபு தலைமையில் மிகச் சிரும், சிறப்புடன் நடைபெற்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இம்மன்றம், தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும், பல தொல்லைகளுக்கிடையே எந்த வித அரசியல் தொடர்புமின்றி பொதுநோக்குடன் பணியாற்றி வருகிறதி,

இந்த மன்றம் இந்த வட்டத்தில் இலக்கியப்பணி புரிந்துவருவதுடன், காலஞ்சென்ற டாக்டர் தர்மாம்பாள் அவர்களின் நினைவாக ஒரு இரவுப்பள்ளியும் நடத்தி வருகிறார்கள. இப்பள்ளியில் சுமார் 100க்குமேற்பட்ட ஏழைச் சிறுவர், சிறுமியர்கள் கல்வி பயின்று வருகிறார்கள்.

மற்றும் வட்டத்தின் வளர்ச்சிக்கான வகையில் சமூகத் தொண்டும் செய்து இவ்விடத்திலுள்ள எல்லாக் கட்சி மக்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றிருக்கிறது.

ஆரம்பத்தில்செயலாளர், மன்றம் ஆற்றிவரும் அரும்பணிகளைப் பற்றி விளக்கினார். தோழர்கள் கே. எஸ். தங்கவேலு (கே. ஆர். ராமசாமி நாடகமன்றப்) "நம்நாடு" நிருபம் ரங்கய்யா, சொ. சண்முகம் (தி.மு.க. செயலாளர்)கோவிந்த ராமானுஜம் எம். ஏ. வட்ட நகர மன்ற உறுப்பினர், கோ, இளவரசு ஆகியவர்கள் மன்றம் ஆற்றிவரும் பணிகளைப் பற்றியும், வள்ளுவரின் குறளிலுள்ள மேன்மையைப் பற்றியும் மிக விளக்கமாகப் பேசினார்கள் செயலாளர் ஆண்டறிக்கையும், வாழ்த்துக் கடிதங்களையும் படித்தார்.

பின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவரும், கழகத்தின் பிரச்சாரக் குழுச் செயலாளருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்,ஏ. அவர்கள் பெரும் கைதட்டல்களுக்கிடையே பேசியது வருமாறு :

அன்புசெழுமிய தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய பெரியோர்களே! அருமைத் தாய்மார்களே!! அருமை நண்பர்களே!!

இந்த ராயப்பேட்டைப் பகுதியில் திருவள்ளுவர் மன்றத்தைத் துவக்கி இரண்டு ஆண்டுகளாக நல்ல பணிகளைச் செய்துவரும் இம்மன்றத்தின் ஆண்டு விழாவில் கலந்து, இம்மன்றம் சார்பில் துவக்க இருக்கும் கலைவாணர் நூல் நிலையத்தை ஆரம்பித்து வைக்கும் பெருமை எனக்களித்தமைக்காக இந்த மன்றத்தாருக்கு எனது நன்றியையும், வணக்கத்தையும் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவள்ளுவர் பெயரால் துவக்கப்பட்டிருக்கும் இம்மன்றம், இங்கு ஏழைச் சிறுவர், சிறுமியர்களின் நலனுக்காக ஒரு இரவுப்பள்ளி நடத்தி வருகிறது. இப்போது நூல்நிலையம் துவக்க இருக்கிறது. இம்மன்றம் பல்வேறு வகைகளை தாய்மொழிப் பணியும், இலக்கியத் தொண்டும், மக்கள் சேவையும் செய்து வருகிறது.

தமிழின் மேன்மையை–தமிழ் வரலாற்றுச் சிறப்பான மக்களுக்கு சேவையின் மூலமும், கருத்து மூலமும் பரப்பி நல்ல பணியினைச் செய்துவரும் இம்மன்றத்தை நான் பல நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன் ஆனால் நேரில் கண்டு அவர்களிடமே கேட்டு அவர்களோடு அளவளாவவே வந்திருக்கிறேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

'தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டு மென்றார் பாரதியார் !

ஆனால் இவர்கள் தாயகத்துக்கே தமிழகம் என்று சொல்ல மறுக்கிறார்கள் !

இந்தப் பிறவிகள் பாரதி விழா கொண்டாடும் வெட்கக்கேடு !

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஆர்வமும், கலை ஆர்வமும், கலைத் தொண்டும் மிக்க அன்பர்கள் இப்பகுதியில் வாழ்கிறார்கள். அவர்களது பேராதரவைக் கொண்டும், மக்களது அன்பையும ஆதரவையும் கொண்டும்இம் மன்றம் இரண்டாண்டுகளாக இப்பகுதியில் நல்ல பணிபுரிந்து வருகிறது.

இங்கு உங்கள் முன், இம்மன்றத்தின் செயலாளர் ஆண்டறிக்கையைப் படித்தார். இரண்டாண்டின், வரவு பற்றியும் செலவுக் கணக்கில் வரவுக்குத் தகுந்த முறையில் செலவு செய்யப்பட்டு, மிச்சத்தையும் காண்பித்திருக்கிறார்.

ஆனால், இன்று அரசியலில் வரவு செலவு கணக்குகளை—திட்டங்களைப் பார்த்தால் வரவு குறைவாகவும் செலவு அதிகமாகவும் காணப்படும். துண்டு விழும்—தேவைப்படும் கணக்குகளைத்தான் பார்க்கலாம். அதி இந்தியத் துணைக் கண்டத்து அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, எங்கும் வரவுக்கு அதிகப்பட்ட செலவுகளைத்தான் பார்க்கலாம். அதைச் சரி செய்வதற்கு வரிகளை அதிகப்படுத்தி சரி செய்வார்கள். வரியும் விலைவாசிகளும், ஒன்றுக்கொன்று போட்டி போட்டு ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே போகும். அரசினரின் கணக்கு செலவுகள் அதிகமாகிக் கொண்டு, வரவு குறைவாகிக் கொண்டுதான் இருக்கிறது. இன்று மாநில அரசும் மத்திய அரசும் துண்டு விழும் கணக்கைச் சரிகட்ட பல வழிகளில் மக்கள் மீது வரிகளைப் போட்டு வருகிறது.

இந்த மன்றத்தாரின் வரவு செலவுகளைப் பார்க்கும்போது, அவர்களைப் பாராட்ட வேண்டியிருக்கிறது. இவர்கள் வரவுக்குமேல் செலவு செய்யவில்லை மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். சென்ற ஆண்டு வரவு வந்ததில் செலவுபோக மூன்று ரூபாய் ஐம்பத்தேழு புதுக்காசுகள் மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். இவ்வாண்டு அதைவிட இருபது காசுகள் அதிகமாக மிச்சப்படுத்தி இருக்கிறார்கள், அதாவது மூன்று ரூபாய் எழுபத்தேழு புதுக்காசுகள் மிச்சப்படுத்தி இருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டக் கூடியது. இவாகளது நிர்வாகத் திறமையையும், நிதி திரட்டும் வன்மையையும் மக்களுக்காகச் செய்து வரும் தொண்டினையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பெயரால் துவக்கி இருக்கும் நூல் நிலையத்திற்கு நீங்களெல்லாம் நல்லாதரவு தரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். மக்களின் அறிவை வளர்ப்பதற்கு நூல் நிலையங்கள் மிகவும் அவசியம் அதை ஏற்படுத்துவது நல்ல தொண்டு. இந்தத் தொண்டை செய்ய முன்வந்த மன்றத்தைப் பாராட்டி—அதுவும் கலை உலகில் நற்றொண்டு புரிந்து மறைந்த கலைவாணரின் பெயரால் துவங்கும் இந்த மன்றத்தை மிகவும் உள்ளன்போடும், மகிழ்ச்சியோடும் துவக்கிவைக்கிறேன்.

இந்த மன்றம் கட்சிப்பற்றும், அரசியல் கலப்புமின்றி தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவே பணியாற்றுகிறது ! அதோடு இரவுப் பள்ளியும்நடத்துகிறது. வள்ளுவரின்கருத்துப்படி, அவர் கூறிச் சென்றபடி இன்று அவர் பெயரால் கல்விச் செல்வத்தை மக்களுக்கு அளித்து வருகிறார்கள்,

கல்விக்கென்று இந்நாட்டில் கலைமகள் இருப்பதாகக் கூறப்படுகிறது! அப்படிப்பட்ட இந்த புண்ணிய பூமியில் 100க்கு 17 பேர்கள்தான் கற்றிருக்கிறார்கள். மீதி 83 பேர்கள் தற்குறிகள்! கைநாட்டுப் பேர் வழிகள்! வண்டி மசியைக் கையில் தடவி கைநாட்டைப்போடுபவர்கள்தான் இந்த நாட்டில் அதிகமாக இருக்கிறார்கள். ஒன்றும் தெரியாத கேரல் பேர் வழிகள் வாழ்வதும் இந்த நாட்டில்தான் அதிகம்.

100க்கு 17 பேர்கள் என்று கணக்கு சொல்வதும் அரைகுறையாக எழுத்துக் கூட்டிப் கோடுகள் போட்டுக் காட்டி படித்து அதன் மூலம் தப்பும் தவறுமாகபடிக்கவும், எழுதவும் தெரிந்தவர்களைத்தான் சொல்லப்படுகிறது!

சாதாரணமாக தபால்எழுதத் தெரியாதவர்களை, தபாலைப் படிக்கத் தெரியாது கொஞ்சமாகப் படித்தவர்களையெல்லாம் கணக்குச் சேர்த்துத்தான் 17 பேர்கள் என்று சொல்லப்படுகிறது! இந்தப் பதினேழு பேர்கள் என்று சொல்வது ஆரம்பப் பள்ளிகளில் ஒன்றும் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்பு, நான்காம் வகுப்பு படித்தவர்களைத்தான் குறிப்பிடப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ பயின்று பட்டம்பெற்றவர்களைப் பார்க்க முடியாது. 'பி. ஏ.', எம். ஏ.' என்ற பட்டம் பெற்றவர்கள் நூற்றுக்கு ஒருவர் கூடத் தேருது.1000பேர்களுக்குப் பத்துப் பேர்கள்தான் இருப்பார்கள். ஆனால் மேலநாட்டில் அதாவது பிரிட்டனில், அமெரிக்காவில், ரஷியாவில் 100க்கு 100 பேர்கள்படித்து அறிவாளிகளாக, விஞ்ஞானிகளாகத் திகழ்கிறார்கள் இந்த புண்ணிய பூமியில்—கலை மகளும், நாமகளும், பூமகளும் ஆழ்வார்களும், ரிஷிகளும், வழிகாட்டிகளும் வாழுகின்ற நாட்டில், படித்தவர்கள் இல்லை. தற்குறிகள் தான் மலிந்திருக்கிறார்கள். அதைப் போக்க இந்த மன்றம் போன்ற பல மன்றங்களும் பணியாற்றி வருகிறது!

இந்த நாட்டில் "ஐயம்" தெளிவுற நல்ல முறையில் படிக்கத் தெரிந்தவர்களோ, எழுதத் தெரிந்தவர்கள் இல்லவே இல்லை அந்த மாதிரி ஆற்றல் படைத்தவர்களும் இங்கு குறைவு. 'நாராயணன்' என்று கையெழுத்துப் போடவேண்டியசிலை ஒருவனுக்கு நேர்ந்தால் அவன் படும் அவஸ்தையைக்காண முடியாது. அவன் பக்கத்தில் நான்கைந்து பேர்கள் இருந்துகொண்டு, "இப்படிக் கோடுபோடு". "அப்படி இழு" என்றெல்லாம் சொல்லி நான்கு மணி நேரம் கழித்து, 'நாராயணன்' அல்லது 'நாராயணசாமி' என்று போடுவதில் அதில் ஒரு "ண"வோ, 'சா"வோ இல்லாது "காராயசாமி" என்றோ, அல்லது"நாராயணமி" என்றோதான் போடுவான்!

இப்படி எழுதியதில் அவன் ஏதோ சாதிக்க முடியாத ஒன்றைச்சாதித்துவிட்டதாக நினைத்தே பெருமைப்படுகிறான். இப்படிப்பட்டவனை யெல்லாம் சேர்த்துத்தான் 100க்கு 17பேர் படித்திருப்பதாகக் கணக்கு வருகிறது!

இன்னும் நமது நாட்டில் படித்தவர்கள் என்று கூறிக் கொள்ளுகிறவர்களுக்கு எங்கெந்த இடத்தில் எங்கெந்த எழுத்துக்களை எழுதுவதென்றே தெரிவதில்லை! 'வல்லினம்', 'மெல்லினம்', 'இடையினம்'; 'ந', 'ன', 'ண' இந்த எழுத்துக்களையும், 'ற', 'ர' எழுத்துக்களையும் பெயர் சொல்லிக் கூறமுடியாது. 'சின்னது,' 'பெரியது' 'மூன்று சுழி', 'இரண்டு சுழி' என்று தான் கூறுகிறார்கள். இவர்கள் 'ஐயம் திரிபற' பயிலாது சந்தேகத்தை வைத்தே படித்திருக்கிறார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஓ. வி. அழகேசன் அவர்கள் தமிழ் மொழியில்பல பிரிவுகள் இருந்து வருவதாகவும் அப்படி இருக்கக்கூடா

(9ம் பக்கம் பார்க்க)

கனம் காமராஜருக்கு நோபல் பரிசு !

பல நூற்றுண்டுகளுக்குப்பின் இரண்டாம் கொலம்பஸ் தோற்றம் !!

தமிழ்நாடு ஒரு புதிய கலைக்களஞ்சிய மேதையை(!) பெற்ற அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் !!

கண்ணுக்கும், கருத்துக்கும் தெரியாமல் மறைந்து கிடந்த அமெரிக்காவை, பல காலம் கஷ்டப்பட்டு, அதை உலகுக்குக் காட்டிய மேதை கொலம்பசை இன்றும் நாம் மறக்கவில்லை ! இன்றும் மறக்கவில்லை என்பதை விட, இன்றும் அவரைப் பாராட்டத் தவறவில்லை !

அது போன்ற ஒரு பெரும் மேதையை இனி காண்போமா என்றும் நாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம் !

"கொலம்பசின் ஆற்றல், கொலம்பசின் திறமை, கொலம்பசின் மேதா விலாசம் இனி யாருக்கு வரப் போகிறது" என்ற கவலையும் நம்மை வாட்டிவதைத்துக் கொண்டிருந்தது ! அந்தக் குறையை தமிழ்நாடு போக்கி விட்டது என்பதை அறிய மெத்த பூரிப்பையும், களிப்பையும் பெற்று பெருமிதம் கொள்கிறோம் !

நமது மாநிலத்து முதலமைச்சர் பகுத்தறிவு என்னும் சொல்லுக்கு சரியான விடையைக் கண்டுபிடித்துச் சொல்லி விட்டார் ! அறிஞர் பெருமக்களும், புலவர் பெருமக்களும் திண்டாடி, திணறி தெருவில் நிற்கும் வகையில் பொருள் கூறிவிட்டார்.!!

" பகுத்தறிவு என்றால் ஊரை ஏமாற்றுவது; புரியாததை சொல்லுவது " என்று கூறி, தமிழ்நாட்டின் பெருமையை, மகிமையை, அறிவை, ஆற்றலை உலகுக்கு எடுத்துக்காட்டி விட்டார் ! " வாழ்க தமிழ்நாட்டுக் கொலம்பஸ் அவர்களே, வாழ்க! நீடூழி வாழ்க" என்று வாய் குளிர வாழ்த்துகிறோம் !

" பகுத்துணர்ந்து பார்ப்பதற்குப் பெயர், பகுத்தறிவு " என்று பல பெரியார்கள் கூறினார்கள் ! " உண்மை எது ? பொய் எது ?" எனபதை ஆராய்ந்து முடிவு செய்வதற்குப் பெயர் பகுத்தறிவு என்று பல பேரறிஞர்கள் செப்பி இருக்கிறார்கள் ! இது முட்டாள்தனமான அர்த்தம். அறிவுக்கு எட்டாத அர்த்தம் என்பதை அனைவரும் வியக்கத்தக்க முறையில் எடுத்துரைத்து இருக்கிறார் !

பல்வேறு மொழிச் சொற்களுக்கு அகராதி தயாரித்துத் தந்த் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகமும், அந்த பல்கலைக் கழகத்திலே பணிபுரியும் மேதைகளும் வெட்கித் தலைகுனியும் வகையில் காமராஜர் புதிய அகராதியை தயாரித்துக் கொடுத்ததற்காக நாம் மீண்டும் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம் !

இதற்காக ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம், காமராஜரை அழைத்து அவரது மேதாவிலாசத்தையும், அறிவுத் திறனையும் பாராட்டி அவருக்கு நோபால் பரிசு வழங்க சிபாரிசு செய்யும் என்று நம்புகிறோம் ! காமராஜருக்கு நோபல் பரிசு கிடைத்துவிட்டால் இதைவிட தமிழ்நாட்டுக்கு அதிர்ஷ்டம் வேறு என்ன வேண்டியிருக்கும் ! சபாஷ் காமராஜரின் எவரெஸ்ட் மூளை !

★



V.G. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
சென்னை-15 * PHONE 88084
மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன் எதிரில்
சென்னை-17

தேர்தல்புரி யாத்திரை

பி.எஸ்.இளங்கோ

ராஜன் வரவை எதிர்பார்த்துக் கொண்டே அந்த பெண்மணி சாப்பிடாமல் உட்கார்ந்து கொண்டிருந்தாள்! மேஜை முன்பிருந்த உணவை அவளது கரம்; கத்தியினுலும், முள் கொரடாவினுலும், தீண்டிக் கொண்டிருந்ததே தவிர—அவளது கண்களும், அவளது இதயமும் அவன் வரவை எதிர்பார்த்தவண்ணமே இருந்தன!

ராஜனும் குளிக்கும் அறையிலிருந்து வந்து விட்டான்! 'எத்தனை நாழி உங்களுக்காகக் காத்திருப்பது! சீக்கிரம் ட்ரஸ் பண்ணிக்கிட்டு வாங்க' என்று அவள் கூறினுள்! அவளது பேச்சில் எத்தனை தாகம் இருக்கிறது என்பதை அவன் கண்டு பிடித்தானே என்னவோ விரைவாகவே ஆடைகளை உடுத்திக் கொண்டு வந்துவிட்டான்!

"இப்படி உட்காருங்கள்" என்று அவள் சுட்டு விரலால் சுட்டிக் காட்டினுள்! அவள் எதிரே அவனும் உட்கார்ந்தான்!

ஒரு கணம், ஆடாது, அசையாது அப்படியே உட்கார்ந்து விட்டாள்! அவனேயே ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய கண்களுக்கு இமைகளும் தடைபோடவில்லை!

என்ன அதிசயத்தை அவள் கண்டு விட்டாள்! எதற்காக அவளுக்கு இந்த ஏக்கப் பார்வை!

அகம் குளிர பேசுவதற்குதான் வாய்இருக்கிறது, அழகை ரசிப்பதற்குதான் கண்கள் இருக்கின்றன. அன்பை செலுத்துவதற்குதான் இதயம் இருக்கிறது, இன்பத்தை அனுபவிக்கத்தான் இளமை இருக்கிறது—ஆணோடு பெண்ணும், பெண்ணோடு ஆணும் சேர்ந்து வாழ்க்கை நடத்தத்தான் இந்தஉயிரும் இருக்கிறது! இதை அவள் உணர்ந்து கொண்டு விட்டாள் போலும்!

டுவிட் பேண்டும், வினன் ஷர்ட்டும், கண்கவர் 'டை'யும் அவளது கண்களுக்கு விருந்தாக இருந்திருக்கலாம்! ஆனல் அவளுடைய கருத்தைத் தொட்டது அவைகளல்ல! அவன் கறுப்புதான் என்றாலும் அவனுடைய உள்ளம் கொஞ்சமும் கறுப்பல்ல!

அவனுடைய பேச்சு, அவனுடைய பண்பு, அவனுடைய அடக்கம், அவனுடைய மரியாதை, அவனுடைய ஆற்றல், அவனுடைய அறிவு, அவனுடைய பொறுமை எல்லாம் சேர்ந்து அவனுக்கு மிக்க பெருமையை அளித்தது!

ஒரு கணவனுக்கு என்ன வேண்டும்? அன்பு வேண்டும். நல்ல பண்பும் வேண்டும், பொறுமை வேண்டும், நல்ல பெருமை வேண்டும்—எல்லாவற்றையும்விட மனைவி என்ற பாச வேண்டும்! இவருக்கு இதில் எது குறைவாக இருக்கிறது? கணவன் கண்ணுக்கு அல்ல—கருத்துக்கு! கணவன் பணத்திற்கு அல்ல பண்புக்கு! அவளுடைய சிந்தனை எங்கெங்கோ சிறகடித்து பறந்து கொண்டிருந்தது!

எதிரே தித்திக்கும் மாம்பழத்தை வைத்துக் கொண்டு, தேன் சொட்டும் பலா பழத்தை வைத்துக்கொண்டு "அதைப் பற்றி நினைக்காதே, அதை எடுத்து உண்ணதே" என்று கட்டளையிட்டால் அதை யார் கேட்பார்கள்!

பஞ்சு, அதன் பக்கத்திலே நெருப்பு! இரும்பு, அதன்பக்கத்திலே காந்தக் கல்! அன்பு, அதன் பக்கத்திலே இன்பம்! எந்த கட்டளைதான் தடுக்கும்? எந்த கட்டளைதான் என்னசெய்யும்? அவன் ஒரு முடிவுக்கே வந்து விட்டான்!

"என்னுங்க சாப்பிடுங்க. எனக்கு பசிக்குது" என்ருன் அவன்!

'பக்கத்திலே பாதம் அல்வா இருக்கிறது! பசிக்குது என்கிறீர்களே!' அவளுடைய பேச்சில் ஒரு மின்சார சக்தியே பாய்ந்திருந்தது!

"பாதம் அல்வாவா? எங்கே இருக்கு? இங்கே "பாயா" தானே இருக்கு!!' அவன் ஏதும் அறியாதவனைப் போல் பேசினன்.

"அதற்குப் பக்கத்திலே பாருங்க!'

"எலும்பிருக்கு!"

"அதற்குப் பக்கத்திலே!"

"ஆட்டுக் குடல் தான் இருக்கு!"

"ஐயோ, ஐயோ! அதற்குப் பக்கத்திலே பாருங்க!"

"நாக்குதானே இருக்கு!"

"நாக்காவது, மூக்காவது! உங்களுக்கு எதிரே பாருங்க, பிரிக்காத பாதாம் அல்வா, யாரும் ருசிக்காத பாதாம் அல்வா!" அவளுக்கு கொஞ்சம் ஆத்திரம் தான் ஏற்பட்டது.

"மறைச்சி வைச்சிருக்கிங்களா?"

"ஆமாம்! மறைச்சி வைச்சிருக்காங்க!" என்று கிண்டல் செய்துவிட்டு இந்த மண்டுவைக் கட்டிக் கொண்டு என்னதான் செய்ய முடியும்" என்று மனதுக்குள்ளேயே திட்டினுள்!

"என்னும்மா கிண்டல் செய்யுறீங்க" அவனுக்கு விஷயமே புரியவில்லை போலும்!

"நான் கிண்டலும் செய்யல, கண்டலும் செய்யல!" அவள் வெடுக்கென்றே பதில் சொன்னுள்!

"அப்படின்னு பாதம் அல்வா இந்த நாட்டிலும் உண்டா?"

"இங்கே ஏது பாதம் அல்வா? நம்ம நாட்டில்தான் பாதம் அல்வா உண்டு" அவனுடைய பேச்சில்தான் எத்தனை பொருள் இருக்கிறது!

"அங்கிருந்து......"

"ஆமாம், ஆமாம்! உங்களுக்காகவே இங்கே வந்திருக்கு!" அவள் மெத்த குறும்புக்காரி என்பதை சொல்லால் விளக்கினுள்!

"அம்மா! எனக்கும் கொஞ்சம் மூளை இருக்கு!" ராஜனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

"உங்களுக்கும் மூளை இருக்கா? அப்படின்னு அந்த பாதாம் அல்வாவும் உங்களுக்காக ருசிக்கும்!" ஒரு பெண்ணிற்கு இருக்கும் வாய், ஆணுக்குக் கிடையாது என்பதை அவள் நிரூபித்து விட்டாள்!

"எங்கே! கொஞ்சம் கொடுங்கள், ருசிக்கிறதாபார்க்கலாம்!" ராஜனுக்கும் மூளை வேலை செய்ய ஆரம்பித்து விட்டது போலும்!

"இப்போதின்னு, அது ருசிக்காது!" அவள் மெல்ல பேச்சில் நழுவ ஆரம்பித்தாள்!

"பின்னே எப்போதுங்க வேண்டுமாம்!" அவனும் அவளை விடவில்லை!

"இராத்திரியில் சாப்பிட்டால் தான் அது ருசிக்கும்!"

"சரிதாங்க!" அவனும் கிண்டல் செய்ய ஆரம்பித்தான்!

"இதோ பாருங்க! இனிமே என்னை போங்க, வாங்க என்றெல்லாம் கூப்பிடக்கூடாது!" அவள் மெல்ல காரியத்தில் இறங்க ஆரம்பித்தாள்!

"பின்னே எப்படிக் கூப்பிடணுமாம்!

"போ, வா என்றே கூப்பிடுங்க!"

"ஐயய்யோ! அது எனக்குப் பழக்கமில்லை!" அவன் கொஞ்சம்

நடுங்கினான்!

"எங்கே கொஞ்சம் கூப்பிட்டுப் பாருங்க! பழக்கம் இருக்கா, இல்லையான்னு தெரிஞ்சுக்கலாம்!"

அவன் ஏதும் பேசவில்லை! ஊமையாகிவிட்டான்! அதுவும் அவளுக்கு ஒரு மகிழ்ச்சியைத் தான் தந்தது!

22

இரவு மணி எட்டுதான் என்றாலும் அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்! நீண்ட பிரயாணம் தந்த களைப்பும், ஸ்பிரிங் கட்டிலும், வெல்வெட் மெத்தையும், மேலே சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியும் அவனது உறக்கத்திற்குப் பெரிதும் துணைபுரிந்து கொண்டிருந்தன!

ஆனால் அவளுக்கு மட்டும் உறக்கம் வரவே இல்லை! விளக்கின் அருகாமையிலேயே கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தாள்! தூக்கத்திலும் அவனது முகம் தனி களையோடு இருந்ததாகத் தான் அவள் நினைத்தாள்! அவன் உதட்டிலே புன்னகை இழையோடிக் கொண்டிருப்பதாகவே எண்ணினாள்!

"மணி இன்னும் சரியாக எட்டாகவில்லை; அதற்குள் என்னவேண்டியிருக்கு தூக்கம்" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டாள்!

கட்டிலை விட்டு எழுந்து அவன் பக்கத்தில் கிடந்த சோபாவில்போய் சாய்ந்துகொண்டு அவனையே உற்று உற்று பார்த்துக் கொண்டிருந்தாள்! பால் பானையைப் பார்த்துவிட்ட பூனை எத்தனை நேரம்தான் தன் நாக்கு ருசியை அடக்கிக்கொண்டிருக்கும்! அவனைப் பார்க்கப் பார்க்க அவளது இதயம் கனத்து களித்தது! செழிப்பால் வளர்ந்து கிடந்த அவளது அங்கம் ஒவ்வொன்றும் புடம் போட்ட தங்கத்தைப் போல் மெருகேறி பளபளத்தது!

அவளுக்கு, அவை கள் கொடுத்த வேதனையை அவளால் தாங்கவே முடியவில்லை!

விளக்கை அணைத்தாள், நெஞ்சிலே கொஞ்சம் உறுதியை வரவழைத்துக் கொண்டாள்! அவன் படுக்கையில் உட்கார்ந்தாள்! "சேச்சே, இது என்ன பைத்தியக்காரத்தனம்" என்று அவளது பேதை நெஞ்சம் நினைக்கவே விடுவிடு வென்று எழுந்து தன் படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள் தூக்கம் வரவில்லை! சிறிது நேரம் எதைப்பற்றியோ யோசித்துக் கொண்டிருந்தாள்! "இன்ப வேதனையால் துடிதுடிக்கும் நமக்கு என்ன வேண்டியிருக்கிறது நாணம், என்ன வேண்டி இருக்கிறது அச்சம்! துணிந்தால் தான் எதையும் சாதிக்க முடியும்" என எண்ணி எழுந்தாள்! அவன் அருகே மீண்டும் சென்றாள்! அவனது கரங்களை ஓசைபடாமல் எடுத்து தன் மார்பு, கன்னத்தில் ஒத்திக் கொண்டாள்!

"ஐயோ, திருடன்! ஐயோ, திருடன்" என்று அவன் வாய் விட்டுக் கூச்சல் போட ஆரம்பித்தான்!

"எங்கே ராஜா, திருடன்!" அந்த ராஜா அவளுக்கு இன்பமாக இருந்தது! அவனுக்கோ பெரும் வேதனையாக இருந்தது! அதற்குள் பையன் ஓடிவந்து "எங்கே சார் திருடன்" என்று கேட்டான்!

"ஓ போடா!" அந்த பையன் மீது கடுகடுத்தாள்! அவனோ வெலவெலத்து, நடுநடுங்கிபோய் படுத்துக்கொண்டான்!

"ராஜா! வந்தது திருடனா? அல்லது திருடியா?" அவளது போக்கில் இனிமை தோய்ந்து கிடந்தது!

"திருடியாகவும் இருக்கலாம்" அவன் விஷயத்தை ஓரளவு புரிந்துகொண்டான் போலும்!

"எதைத்திருட வந்திருப்பாள்" அவள் மீண்டும் கேலிசெய்ய ஆரம்பித்தாள்!"

"எனது மணிபர்சை திருட வந்திருக்கலாம்!"

"ஏன்? மனதையும் திருட வந்திருக்கலாம் அல்லவா?"

"என் மனதைத் திருடிக் கொண்டுபோய் அவள் என்ன செய்வாள்!"

"என்ன செய்வாளா? இங்கே வாருங்கள் காட்டுகிறேன்" என்று கூறிக்கொண்டே ஒரு பெரிய நிலைக்கண்ணாடி முன்பு அவனை சிறிது கண்ணை மூடிக் கொள்ளச் சொன்னாள்!

"இதென்ன விளையாட்டு!" என்றான் அவன்!

"இது திருடி விளையாட்டு! கண்ணை மூடிக்கொள்ளுங்கள் தெரியும்" என்றாள் அவள்!

அவன் கண்ணை மூடுவதும், திறப்பதுமாகவும் இருந்தான்!

"இப்படியெல்லாம் மூடித் திறந்தால் அந்தத் திருடியைக் கண்டுபிடிக்க முடியாது! "இப்படி மூடிக் கொள்ளுங்கள்" என்று அவனுடைய கண்களை அவள் இறுகப்பொத்திக் காட்டினாள்!

அவனது உடல் முழுதும் மின்சாரம் பாய்ந்து விட்டது! அந்தத் தாக்குதலை அவனால் பொறுக்கவே முடியவில்லை!

"ராஜா" அவளது கொஞ்சல் அவனுக்கு மேலும் போதையை அளித்தது! அவன் பேசவில்லை! ஊமையாகி விட்டான்!

"ராஜா! ராஜா! திருடியைக் காட்ட வேண்டுமா?"

பதில் சொல்லவில்லை! விளக்கு தான் அணைந்தது!

(தொடரும்)

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்ராநங்கல் 156 கோடி!

இப்படி கோடி கோடியாக வடக்கே செலவிடப் படுகிறது! தெற்கே ஐந்து ஆண்டுகளுக்கு ரயில்பாதைகளுக்கு மட்டும் செலவிட்ட தொகை—மானங்கெட்ட, மதிகெட்ட, குப்பகாண அமைச்சர்களே 92 இலட்சம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட மூலதனத்தில் சென்னைக்கு ஒதுக்கப்பட்ட தொகையை சென்னை மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் பங்கிட்டால் கிடைப்பது ரூ. 19. ஆனால் அதே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட மூலதனத்தல் பம்பாய், கல்கத்தா இவைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகையை அந்தந்த மாநிலத்தின் உள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் பங்கிட்டால் கிடைப்பது ரூ. 130. ஏன் இந்த வித்தியாசம்? சென்னை வரி கொடுக்கவில்லையா? சென்னை மக்கள் வசதியுடன் வாழ ஆசையற்ற காட்டுமிராண்டிகளா?

இந்த வஞ்சகத்தை—இந்த பித்தலாட்டத்தை தனித்து நின்று குரலெழுப்பிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செல்வாக்கு பெருக மக்கள் வெள்ளத்தின் பலத்த ஆதரவும் கிடைத்துவிட்டது!

இப்படி ஆதரவு பெருகுவதைக் கண்ட அமைச்சர்கள் துள்ளி எழுந்து அடிவயிற்றிலே 'அய்யோ அய்யோ' என்று அடித்துக் கொள்ளுகிறார்கள். 'வடக்கு வாழவில்லை; தெற்கு தேயவில்லை' என்ற புது வியாக்கியானத்தால் நாட்டைக் சுற்றிய அமைச்சர்கள் அகன்ற விழியுடன் துருவித் துருவி ஆராய ஆரம்பித்து விட்டார்கள்.

மக்களைப் பார்த்த காமராஜருக்கு பீதி கவ்விவிட்டது! 'விருது நகர்' பறிபோய் விடுமோ! மீண்டும் நாம் "......" ஆரம்பிக்கவேண்டுமோ? என்ற அச்சத்தால் ஜன்னி கண்டு பிதற்றுகிறார்!

சுப்பிரமணியம் கொஞ்சம் 'சிண்டு' விறைப்புடன் 'விட்டேனே அறிக்கை விட்டேனா பார்' என்று கோவையை சுற்றுகிறார். அடிக்கடி கீழே விழுந்து மணலை கவ்வுவதாக காற்றுவாக்கில் செய்தி வருகிறது!

மீஞ்சூர் சிரஞ்சீவி, 'டார்வினின் கண்டு பிடிப்பு' உளருகிறது! ஓடுகிறது! குதிக்கிறது! விழவில்லை—விழுந்தால் எழுந்திருக்காது!

கக்கன் ஜீ-நின்றாலும் கக்கார், அடித்தாலும் கக்கார், பட்டாலும் கக்கார்—பரம்பரை இருக்குது சாமி! என்ற துணிவு போலிருக்கிறது அவருக்கு!

இந்த நிலையிலேதான் நமது திராவிட முன்னேற்றக் கழகம் "ஐந்தாண்டுத் திட்ட அநீதி எதிர்ப்பு வாரம்" நடத்தி மக்களை விழிப்புறச் செய்கிறது! மக்களின் ஒருமுக ஆதரவு பெருகுகிறது!

இதைக் கண்ட சென்னை எடுபிடிகள் பதவிப் பித்தால் நேருவுக்கு இப்படி ஒரு அறிக்கையை சமர்ப்பித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

"ஸ்ரீ நேருஜிக்கு;

நமஸ்காரம்!

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்குக் கொஞ்சமாவது தங்கள் கருணை கடாக்ஷம் கிடைக்காவிட்டால் 1962க்குப் பிறகு நாங்கள் செய்ய வேண்டிய எங்கள் பரம்பரைத் தொழிலை இப்போதே மேற்கொள்ளுகிறோம்!

இங்ஙனம்;

காமராஜர்

சுப்பிரமணியம்

பக்தவத்சலம்

கக்கன்

...!......?......

★

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இதை ஏன் அமைச்சர்கள் சிந்திக்கக் கூடாது?

நான் கடைசியாக ஒன்றை மட்டும்கூறிவிடைபெறுகிறேன்.

நாம் எதுகேட்டாலும்,எதைக் கூறினாலும் "சோறுகிடைக்குமா "சோறுகிடைக்குமா" என்று கேட்பவர்களை — அமைச்சர்களை, இந்த நாட்டை ஆள்பவர்களைக் கேட்க விரும்புகிறேன் 3 வேளை சோறும், கட்டத்துணியும், மற்ற வசதிகளும் கிடைத்தால் இந்த நாட்டை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட சம்மதமா?

இன்று இங்கிருப்பதைவிட, இவர்கள் ஆட்சியில நிலவுவதை விட பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் நல்லமுறையில் வைத்திருக்கிறோம் என்று அமெரிக்காவோ, பிரிட்டனோ, ரஷ்யாவோ கூறினால் ஒப்படைக்கிறீர்களா? இதற்கு என்ன பதில் கூறுவார்கள் அமைச்சர்கள். பஞ்சம், பசி, பட்டினி நிலவுவதற்கு என்ன காரணம் என்பதை எண்ணி அதற்கான வழிவகை செய்யாது சோறு கிடைக்குமா" என்று சொல்வது அமைச்சர்களுக்கு அவமானமாக இல்லை?

ஒரு பெயரால் நமக்கு, இழிவைத்தருகிறது, நமது பண்டைய பெயரைக் கெடுக்கிறது' நமக்கு மானம் பறிபோகிறது. நம்முடன் இருந்து வந்தவர்களெல்லாம் அவர்கள் நாட்டிற்கு தங்கள் மொழியின் பெயரால் பெயர் சூட்டியிருக்கிறார்கள் நாம் அதுபோன்று கூறினால் நம்மை நமது அமைச்சர்கள் இழிவாகவும், கேலியாகவும் பேசுகிறார்கள் என்றால் நாம் என்ன செய்வது?

"மானம் பெரிதா? சோறு பெரிதா" என்பதையும் "உடம்பிலிருந்து ஒரு மயிர் கீழே விழுந்தால் அப்பொழுதே தன் உயிரைக் கவரிமான் இழந்து விடும் என்ற தமிழகத்தில் பிறந்த அமைச்சர் இப்படிப் பேசுவது சரியல்ல.

ஆகவே இதையெல்லாம் போக்கி இந்த நாட்டு மக்கள் நல்ல வாழ்வு வாழ்வதற்கான வகை செய்வதற்காக இந்த மன்றம் பாடுபடவேண்டுமென்றும், அதற்கான வகை வழிகளைச்செய்ய நீங்களெல்லாம் ஆதரவு தந்து உதவவேண்டுமென்றும் கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.●

(தலையங்கம் தொடர்ச்சி)

குறுக்கு வழியில், கொல்லைப் பாதைச் சந்துகளில் நுழைய வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள்! அதற்காக, மிக்க இழிவும், கீழ்த்தரமும் கொண்ட ஈனச்செயல்களையெல்லாம் செய்யத் தொடங்குகிறார்கள்!

தேர்தல்வர இன்னும் இரண்டாண்டுகளுக்கு மேல் இருக்கின்றது! அதற்குள் மனித இனம் செய்யக் கூடாத காரியங்களையெல்லாம் செய்யத் தொடங்கி விட்டார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்துவிட்டால் "ஏக சக்ராதிபதியாக இந்த நாட்டை ஆண்டுவிடலாம் என எண்ணி நம்மை அழிக்க எல்லா இழி செயல்களையும் கையாண்டு வருகிறார்கள்!

ஆரம்பத்தில், நம்முடைய கூட்டங்களில் கலகம் விளைவித்தார்கள், கல்லெறிந்து கலாட்டா செய்தார்கள், பிறகு கத்தியைத் தூக்கினார்கள், பல உயிர்களை பச்சைமாமிசமாக மென்று தின்றார்கள்! எதற்கும் நாம் அஞ்சவில்லை!

முடிவில் சொககலிங்கம் வேலையைக் கையாள வந்திருக்கிறார்கள்! "திராவிட முன்னேற்றக்கழகத்தில் பெருங்குழப்பம், பதவிச்சண்டை அதனால் தொண்டர்கள் அனைவரும் கூண்டோடு வெளியே ஓடிவந்து விட்டார்கள்" என்ற பிரச்சாரத்தை துணிந்து செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்!

"திராவிடஸ்தானுக்கு அரோஹரா" என்று இல்லாத நடவாதசெய்தியை வெளியிட்டு ஒரு மனக்குழப்பத்தை உண்டாக்கமுன் வந்திருக்கிறார்கள்! பாவம்—சொக்கலிங்கம் நவசக்திக்கு தன்னுடைய நவசக்திகளையும் கொண்டு உயிர்ப்பிக்கிறார் போலும்! அது நடவாது என்று அவருக்கே தெரியும்!

சொக்கலிங்கம் வேலை இதுவரை எந்த இடத்திலும் வெற்றி பெற்றதே கிடையாது! இங்கு மட்டும் எப்படி வெற்றிபெறமுடியும்?

இந்த விஷயம் நம்மைக் காட்டிலும் காமராஜருக்கே மிக நன்றாகத் தெரியும்!

எனவே "சொக்கலிங்கம் வேலையை" நம்பி காமராஜர் தேர்தலில் நின்றால் காங்கிரஸ் கவிழ்வதும் உறுதி, அமைச்சர்கள் வீட்டுக்குப் போவதும் உறுதி!★

"நவசக்தி"யிலிருந்து சொக்கலிங்கம் விலக்கப்படுவார்?

⊕⊕⊕

30 ஆண்டு அனுபவத்திற்குப்பின் காமராஜர் செய்யும் இறுதி முடிவாம்!

இது உண்மையா? அல்லது இதுவும் 'சொக்கலிங்கம் வேலை'தானா?

★★★

"சென்னையிலிருந்து வெளிவரும் தேசிய தினசரி" "நவசக்தி"யில் சம்பளத்திற்கு ஆசிரியர் வேலைப் பார்த்து வரும் திருவாளர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களை அப்பதவியிலிருந்து நீக்கப்படுவார்" என்று சென்னையில் பலமான ஒரு வதந்தி உலாவிவருகிறது!

திருவாளர் சொக்கலிங்கத்தை அப்பதவியில் அமர்த்தியதைப் பற்றி இப்போதுதான் பொறுப்புள்ளவர்கள் வருந்துகிறார்களாம்! "அவர் தொட்டது துலங்காது! வைத்தது விளங்காது" என்று சிலர் முணுமுணுக்கவும் செய்கிறார்களாம்!

இது ஓரளவு உண்மையுங்கூட! ஆலையில்லாத ஊரில் இலுப்பைபூ சர்க்கரையாக இருந்த காலத்தில் வெற்றி முழக்கம் புரிந்து வந்த சொக்கலிங்கம் முதன் முதலாக "தினமணி" பத்திரிகையில் சம்பளம் வாங்கிக் கொண்டு ஆசிரியர் உத்தியோகம் பார்த்து வந்தார்! அங்கும் இந்த சொக்கலிங்கம், தன் "சொக்கலிங்கம் வேலை'யைக் காட்ட ஆரம்பித்தாராம்! அதனால் முதலாளி கோயங்காவுக்கும் தொழிலாளி சொக்கலிங்கத்திற்கும் சிண்டு பிடிச் சண்டை நடைபெற்றது! "விட்டேறை பார்! யார் இந்த வடக்கத்தியான்?" என்று வீரப்புப் பேசி வெளியே வந்தார்! "வந்தாரா?" இது கேள்விக் குறியாகவே இருக்கட்டும்!

அதன்பின் தொழிலாளி சொக்கலிங்கம், முதலாளி சொக்கலிங்கமானார்! ஆமாம்! "தினசரி" என்னும் தினசரி ஏட்டை சொந்தத்தில் நடத்த ஆரம்பித்தார்! தனக்குத் தானே "சொக்கலிங்கம் வேலை" செய்துகொண்ட காரணத்தால் 'தினசரி' சொக்கலிங்கம் 'ஜனயுகம்' சொக்கலிங்கமானார்! அந்தோ பரிதாபம்!! அங்கும் 'சொக்கலிங்கம்' வேலை தொடர்ந்தது போலும்! முதலாளி சொக்கலிங்கம் மீண்டும் தொழிலாளி சொக்கலிங்கமானார்! அதாவது வாங்குவாரில்லாது, கடையைக் கட்டிக்கொண்டார்!

பிறகு, எந்த கோயங்காவை மிரட்டி, உருட்டி, ஒழித்துக் கட்டி, சமாதி செய்வேன் என்றெல்லாம் உறுமினாரோ அந்த கோயங்காவிடம் சரண் புகுந்தார் அங்கே எழுத்து வேலை போய், பைல்கள் புரட்டும் வேலை கிடைத்தது!

கதையை வளர்த்துவானேன்? அதன் பின் 'பாரதம்'! இப்போது 'நவசக்தி!' இங்கும் சொக்கலிங்கம் வேலை நடப்பதாகவும், அதனால் இங்கும் சீட்டுக் கிழிக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது!

கனம் காமராஜர் எத்தனை காலத்திற்குத்தான் பொறுமையாக இருப்பார்! "ஐயோ, பாவம்" என்று எத்தனைக் காலத்திற்குத்தான் சகித்துக்கொள்வார்! எனவேதான் "முப்பதாண்டு காலமாக சகித்துக்கொண்டு வந்தது போதும் இனியும் சகித்துக்கொள்ள முடியாது" எனக் கருதி இந்த இறுதி முடிவிற்கு வந்திருப்பதாக சென்னையில் பேசிக் கொள்ளப்படுகிறது! இது உண்மையா? பொய்யா? அல்லது இதுவும் ஒரு 'சொக்கலிங்கம் வேலை'தானா? நமக்குத் தெரியவில்லை! யார் எப்படிப் போனால் நமக்கு என்ன வந்திருக்கிறது? லாபமும் நஷ்டமும் அவர்களுக்குத் தானே?

எந்தப் பெயர் இருந்தால் என்ன என்று கேட்கும் அமைச்சர்கள்

தங்கள் குழந்தைகளுக்கு நாய், கழுதை, குரங்கு என்றெல்லாம் பெயர் வைத்துக்கொள்ள சம்மதிப்பார்களா ?

அறியாமையில் உழலும் 'அடிதண்டம்' அமைச்சர்கள் !

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் எந்தஎழுத்தை எங்கும் உபயோகப் படுத்தலாம் என்றும் கூறி வருகிறார்.

ன, ண, ந, ற, ர, ல, ழ, ள, இவைகளில் எதையும் உபயோகிக்கலாம் என்று சமீபத்தில் கூறியிருக்கிறார். அவர் ந, ண, ன, எழுத்துக்களில் எதையும் உபயோகப்படுத்தலாம் என்றும் சொல்கிறார்.

இவர்களெல்லாம் தமிழ் மொழியைப் பற்றியும், அதன் சிறப்பைப் பற்றியும் தெரியாதவர்கள், அதை நன்றாக படிக்காதவர்கள் என்றுதான் கூற வேண்டும்.

ஆங்கிலத்தில் T, D, P, B, U, W. என்ற எழுத்துக்களில் வித்தியாசம் இருக்கிறது! அவர்கள் T போடவேண்டிய இடத்தில் D போடலாம் என்று சொல்ல மாட்டார்கள். அதே போன்றுதான் பல வார்த்தைகளிலும் வித்தியாசம் இருக்கிறது. ஆகவே இந்த நாட்டில் கல்வி வளர்ச்சியடைய — கல்வியில் குற்றமற்று இலக்கிய வரம் போடு கற்க இந்த மன்றத்தார் பாடுபட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

வள்ளுவப் பெருந்தகை அவரது குறளில் பலவிஷயங்களைக் கூறியிருக்கிறார். அவர் கற்காதவர்களைபற்றி மிகக் கடுமையான மொழியில் சாடுகிறார். அதாவது கல்வி கற்காதவனுடைய முகத்தில் கண்கள் இருப்பது இரண்டு புண்களுக்குச் சமமானது என்றும், அவன் குருடனுக்குச் சமமானவன் என்றும் கூறுகிறார்.

"கண்ணுடையோர் என்போர் கற்றோர்
முகத்திரண்டு புண்ணுடை
யோர் என்போர் கல்லாதவர்"

இந்தப்பாடல் மூலம் மிக அழகாக — தெளிவாக கற்றவனுடைய முகத்தில் இருப்பதுதான் கண்கள்-கற்காதவன் முகத்திலிருப்பது புண்கள் என்று வள்ளுவர் சொல்லி விட்டார்.

ஒன்றரை அடிப் பாடலில் படிக்காதவன் எப்படிப்பட்ட இழிந்தவன்—எதற்குச் சமமானவன் என்பதையும் மிகத் தெளிவாக விளக்கி விட்டார்.

இன்று நம் நாட்டில் படித்திருந்தாலும், தெளிவுள்ளவர்கள் ஆராயுந்திறனுடையவர்கள், ஐயம் தெளிவுற கற்றவர்கள் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான், பொது இடங்களில் அமைக்கப்படும் கழிவிடங்களில் (கக்கூசுகள்) ஆண்கள், பெண்கள் செல்லுமிடங்கள் என்பதைக் காட்டுவதற்கு எழுத்தினால் எழுதினால் மட்டும் போதாதென்று எண்ணி, பெண்ணுருவமும், ஆணுருவமும் பொறித்து வழிகாட்டுகிறார்கள். இந்த நிலை நம்மை எவ்வளவு இழிவுபடுத்தும், கேவலப்படுத்தும் நம்மை ஒன்று மறியாத அப்பாவிகள் என்பதைக் காட்டும் நிலையை உண்டாக்குகிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

இன்னும் இன்று நம் நாட்டில் நடைபெறப்போகும் பொதுத் தேர்தல்களில் நடக்கும் காரியங்களை நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் படித்தவர்களுக்கும், வயது வந்தவர்களுக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமை வழங்கப்பட்டது. ஏதோமக்களுக்குத் தந்த பெரிய "வரப்பிரசாதம்" என்று இன்றுள்ள ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள். அதைப்பற்றி மிக ஜம்பமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று நடைபெறும் தேர்தல்களில் ஓட்டுக் கேட்கும்போது அபேட்சகராக நிற்பவர்களைக் காட்டி வாக்குக் கேட்பதில்லை "கந்தசாமிக்கு ஓட்டுப்போடு, நாராயணசாமிக்கு ஓட்டுப்போடு, ராமதாசுக்கு ஓட்டுப்போடு" என்று கேட்பதில்லை. சின்னங்களைக் காட்டி ஓட்டுக் கேட்கிறார்கள்.

"மாட்டுக்கு ஓட்டுப் போடு, குடிசைக்கு ஓட்டுப் போடு, எருமைக்கு ஓட்டுப்போடு, கோழிக்கு ஓட்டுப்போடு, சூரியனுக்கு ஓட்டுப்போடு என்று மக்களிடம் சென்று ஓட்டுக் கேட்கிறார்கள்? ஏன் அப்படிக் கேட்க வேண்டும்? ஓட்டுப் போடும் நிலை மக்களிடம் சரிவர இல்லை, தேர்தல் சட்டப்படி நடப்பதற்கான தெளிவு நம்மிடம் இல்லை என்று உணர்ந்துதான், சின்னங்கள் பொறித்த பெட்டிகளை வைத்து ஓட்டுக் கேட்கிறார்கள்.

மேல்நாடுகளில் தேர்தல்களில் நிற்பவர்கள் இருவரும் தங்கள் பெயர்களைக் கூறி ஓட்டுக்களைக் கேட்பார்கள். அவர்கள் தகுதித் திறமையை உணர்ந்து வாக்குகள் அளிப்பார்கள்,

ஆனால் கல்விக் கடவுள் இருக்கும் இந்தப் புண்ணிய நாட்டில், "ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் கற்ற நாடு என்று பேசிக் கொள்ளும் இந்த நாட்டில் எப்படி ஓட்டு கேட்கிறார்கள்?"

"மாடு தெரியுமா" "கோழி பார்த்திருக்கிறாயா" "ஒட்டகம் கண்டிருக்கிறாயா" என்று சின்னங்களின் உருவங்களைச் சொல்லி ஓட்டுக் கேட்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நாம் இன்று கடவுள்களிடம் பக்தியோடு அருள் கேட்பதாக இல்லை. லஞ்சம் கொடுத்து நமக்குத்தேவையானதைக் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்று கடவுளிடம் கொடுத்து விட்டுத்தான் தேவைப் படுவதைக் கேட்கிறோம்.

"பாலும், தெளி தேனும், பாகும், பருப்புமிவை, நாலும் கலந்துனக்கு நான்தருவேன், கோலஞ்செய் துங்கக் கரிமுகத்து 'தூமணியே' எனக்குச் சங்கத் தமிழ்மூன்றும்தா"

இந்தப் பாடலிலிருந்தே நன்கு தெரிகிறது. கடவுளிடம் நாம் நான்கு பொருள்களைக் கொடுத்து, மூன்று பொருளைக் கேட்கிறோம்.

இந்த நாட்டில் கடவுள்கள் அவதாரங்கள் எடுத்திருக்கின்றன, பத்து அவதாரங்கள் எடுத்து வந்திருக்கிறது, கல்விக்கு, பொருளுக்கு, அறிவுக்கு பூமிக்கு இவைகளுக்கெல்லாம் கடவுள்கள் இருந்திருக்கின்றது. கலைமகள், நாமகள், பூமகள் என்றெல்லாம் கடவுள்கள் இருந்திருக்கின்றன, காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள், திருவாடுதுரை ஆதீன பரமச்சாரிய சுவாமிகள், அவதாரங்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் இத்தனை பேரும் தோன்றிய இந்நாட்டில் படித்தவர்கள் தொகை 100-க்கு 17-பேர்தான் அதுவும் நன்றாகப்படித்தவர்கள் இன்னும் குறைவு.

இந்தக் கடவுள்களும் அவதாரங்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இல்லாத ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் 100க்கு 100 பேர்கள் படித்து விஞ்ஞானத்திலும், அறிவிலும், தொழிற் முறையிலும், முன்னேறி இன்று எல்லா வகையிலும் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறது.

பொருளாதாரத்திலும். மற்ற வகையிலும் உயர்ந்திருக்கிறது. இங்கு நாம் கழித்து, பழையது என ஒதுக்கும் பொருள்களை வாங்கி, மிகவும் குறைந்த விலைக்கு வாங்கி, அதைப் புதுப்பித்து, பல மடங்கு அதிகமான விலைக்கு நமக்கே விற்கிறது.

உதாரணத்திற்கு வேண்டுமானால் இங்கு நாம் கூட்டத்திற்கு உபயோகப்படுத்தும் ஒலி பெருக்கியை நாம் 2000 ரூபாயுக்கு வாங்குகிறோம். இங்கு புதுப் பேட்டையிலோ, மண்ணடியிலோ ஒன்றரை ரூபாயுக்கோ, 2 ரூபாயுக்கோ விற்ற பழைய இரும்பை மேல் நாட்டுக்காரன் வாங்கி அதையே புதுப்பித்து 1500, 2000 ரூபாயுக்கு விற்கிறான். அங்கு கல்வி கற்ற

(11ம் பக்கம் பார்க்க)

5 லட்சம் நிதி சேர்க்க அண்ணு ஆணையிடுகிருர்

அந்த லட்சியத் தொகையை சேர்க்க அனைவரும் செயலாற்ற வாரீர் !

பொருளாளர் கருணாநிதி அன்பழைப்பு !

நம்முடைய கழகத்தின்பொதுச் செயலாளராக மதிப்பிற்குரிய நமது தலைவர் அறிஞர் அண்ணு அவர்களும், அவருக்குத் துணை யாக மற்ற ஐந்து நண்பர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிருர் கள்.

இங்கு இந்த மேடையில் ஒவ் வொரு மாவட்டத்திலிருந்து வந்த முன்னணி வீரர்கள் பேசிய பேச் சுக்களில் கண்ணியமும், கட்டுப் பாடும் எடுத்துக் காட்டியது.

''உள்ளத்தால் ஒருவரே உட லால் மட்டும் வேறுபட்டவர்கள்'' என்பதை இந்த மேடை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

நான் பொருள் காப்பாளனுக வந்திருப்பதால் நிறையப் பொரு ளைச் சேர்ப்பேன் என்றும், சேர்த் தப் பொருளைக் காப்பேன் என் றும், என்னைத் தூண்டும் வகை யிலும், நான் அதிகப் பணிகள் செய்ய ஆர்வமூட்டும் வகை யிலும் நமது நண்பர்கள் பேசி ஞர்கள்.

நாம் அவசியம் பொருள் சேர்க்க வேண்டும். அது அவ சியமான காரியம். இன்னும் ஒன்றரை ஆண்டுகளில்பொதுத் தேர்தல் வரப் போகிறது. அதற் குள் நாம் விரைவில் பொருள் சேர்க்க வேண்டும்.

நமதுதலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டப் பிரசாரத்தில் ஈடுபடு வதற்கு முன் வருகின்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியின் போக்கை மக்களிடம் எடுத்துக் கூறி அவர்கள் விழிப்படையச் செய்வதற்காக உண்டியல் வைத் துக் காசுகள் சேர்க்க வேண்டு மென்று கட்டளையிட்டார்கள்.

நமது அண்ணு அவர்கள் தேர் தலுக்குள் 5 லட்சம் ரூபாய்கள் சேர்க்க வேண்டுமென்று விரும்பு கிருர்கள். பொருள் காப்பாள ஞக வந்துள்ள நான் உங்கள் ஆதரவால் அந்த இலட்சியத் தொகையாகிய 5 லட்சத்தைச் சேர்ப்பேன் என்று உறுதி கூறு கிறேன்.

காங்கிரஸ்காரர்கள் பணம் சேர்க்கும் இலட்சியம் வேறு, நாம் பணம் சேர்க்கும் இலட்சியம் வேறு.

நமக்கு பணம் தேவைதாஞ ? அது எதற்கு என்று சிந்திக்க வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் வாக்காளர் களுக்குப் பணம் கொடுத்து வாக்குகளைச் சேர்க்கப் பணம் சேர்க்கிருர்கள். நாம் அப்படி ரூபாய் ஒன்று, இரண்டு தருவ தாக நோட்டு நீட்டி, ஓட்டுகள் பெறுவதற்காக நாம் பணம் சேர்க்கவில்லை.

மாற்ருர்கள் பணம் கொடுத்து ஓட்டுகள் பெறுவதை தடுப்ப தற்காக — அம்மாதிரியான இழி செயல்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக நாம் நிதி சேர்க்க வேண்டும்.

விமானத்தில் சென்று தடுக்க முடியாவிட்டாலும் காரில் சென்று தடுப்பதற்கான வசதிகளாவது நம்மிடம் இருக்க வேண்டும்.

10வது மைலிலுள்ள ஊரில் ஓட்டுக்கு பணம் தருகிருர்கள் என்று தெரிந்தால் நாம் நடந்து போய் அதைத் தடுக்க முடியாது. ஆகவே இன்று முதல் நீங்க ளெல்லாம் உண்டியல் வைத்து பணம் சேர்க்க முற்பட வேண் டும். அதுதான் நமக்குச் சிறந்த கேடயம். அந்தப் பணியில் நீங்களெல்லாம் உடனே ஈடுபட வேண்டி விடை பெறுகிறேன் என்று முடித்தார்.

○

காங்கிரஸ் கட்சி தங்கம் கடத்துகிறது !

பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கட்சியின் மோசடி !

❁❁❁

பாண்டிச்சேரியில் வளர்ந்துள்ள 'மூல விக்கிரகங்களின்' அடிதடியால் அம்பலமாக்கப்படும் ஊழல் இரகசியங்கள் 'அங்கிங்கெனுதபடி எங்கும்' பரவி நிற்கும் காங்கிரஸ் கட்சி யின் சுயநலப் போர்வையைக் கிழித்தெறிகின்றன! பாண்டிச் சேரி காங்கிரஸ் நிர்வாகத்தினர் செய்த மோசடித் தனங்களை விளக்கி அகில பாரத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சஞ்சீவி ரெட்டிக்குப் புகார்மனு அனுப்பப் பட்டிருக்கிறது !

அவற்றில் சில :

1. பாண்டிச்சேரியில் உள்ள சில காங்கிரஸ் உறுப்பினர் களாலும், மந்திரிகளாலும் கள்ள தங்கக் கடத்தலுக்குப் பகிரங்கமாகவே ஊக்கமளிக்கப்படுகிறது !
2. காங்கிரஸ் ஆட்சி பீடத்திலுள்ள ஒரு உறுப்பினரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவருக்குப் பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகியவை சம்பந்தப்பட்ட பொது வேலை களில் சில 'கண்ட்ராக்ட்டு'கள் கொடுக்கப்பட்டுள்ளது!
3. சட்டசபைத் தலைவரின் நெருங்கிய உறவினர் ஒருவ ருக்கு பஸ் போக்குவரத்து லைசென்ஸ் வழங்கப்பட் டிருக்கிறது !
4. மற்றொரு டாக்ஸி போக்குவரத்து லைசென்ஸ் சட்டசபைத் தலைவரின் இளைய மகனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது!

இவைகளைத் தவிர இன்னும் எத்தனையோ மோசடிகள் உண்டு ! அவைகளனைத்தும் காங்கிரஸ் கட்சியின் சகிக்க முடியாத முடைநாற்றங்கள் !

பாரதத்திற்கு நோய்

''இன்றைய இந்தியாவில் எல்லா துறைகளிலும் உடனடியாக ஒரு சீர்திருத்தம் ஏற்பட்டாக வேண்டும். இன்றைய சமுதாயத் தின் பேய்—அதாவது நமது எண்ணத்தில் படிந்து கிடக்கும் அழுக்கு என்ன என்ருல்— இந்தியா சுதந்திர மடைந்த பிறகு நம்மவரிடையே, அதிகார வெறியும், ஜாதிமத வேறுபாடுகளும், நாட்டுப் பொருமை யும், அரசியல் வெறியும், கட்சிப் பாகுபாடும்தான் தோன்றி அதிக மாக வளர்ந்திருக்கிறது. இதுதான் சுதந்திரத்திற்குப் பிறகு நாம் கண்ட பலன் !

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

கலைமகள், நாமகள், பூமகள், அவதாரங்கள் பிறந்த நாட்டிலே 100க்கு 83 பேர் தற்குறிகள் ஏன்?

இது இல்லாத மேல் நாட்டில் 100க்கு 100 பேர் படித்திருக்கிறார்கள்!

இந்த நிலை ஏன் ஏற்பட்டது?

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் இருக்கிறார்கள். கற்றதைப் பயன்படுத்தும் அறிவும் ஆற்றலும் அவனுக்கிருக்கிறது. அவன் ஆற்றலுக்கு மதிப்புக் கொடுக்கிறான். நாம் ஆண்டவனுக்கு மதிப்புக் கொடுக்கிறோம். அவன் முன்னேறுகிறான், நாம் பின்னே போகிறோம்.

மேல்நாடுகள் ஒவ்வொன்றும் இன்று தங்கள் அறிவைப்பயன்படுத்தி போட்டிகள் போட்டுக் கொண்டு விஞ்ஞானத் துறையிலும். அறிவுத் துறையிலும் முன்னேற்றமடைந்து, அச்சடிக்கும் இயந்திரங்கள், டெடில்கள், ஒலிபெருக்கிகள் இவைகள் நமக்கு அனுப்புகின்றன.

ஆகவே, நாம் இன்றுள்ள கீழான நிலையைப் போக்குவதற்கும் இந்த மன்றம் நல்ல முறையில் பாடுபட வேண்டும். வள்ளுவர் எதிர்காலத்தை எண்ணியும் நாம் எவ்வாறு முன்னேற வேண்டும் என்பதை உணர்ந்தும் அவரது குறளிலுள்ள 1300 பாடல்கள் நமக்கு வழிகாட்டுகிறது. அந்த அற்புதமான பாடல்களைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய திரு. அரசு அவர்கள் கூறினார்கள். "சென்னை மாநிலம்என்பதற்குப் பதிலாகத் "தமிழகம்" என்று, "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட இந்த மாநில அமைச்சர்கள் மறுக்கிறார்கள் என்று" இந்த மாநிலத்து அமைச்சர்களுக்குத் தமிழ்பற்றோ, தமிழின் மீது ஆசையோ, தன் மொழியைக் காக்க வேண்டுமென்ற விருப்பமோ சிறிதும் கிடையாது.

"தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்று நாம் கூறுவதைக் கேலிசெய்து, கிண்டல் செய்கிறார்கள்.

நமது மாநில முதலமைச்சர் காமராசர் கூறுகிறார் "நான் படித்த இலக்கியங்களில் "தமிழ்நாடு" என்று கூறப்படவில்லை என்கிறார். இது நமக்கு வினதையாகவும் வேடிக்கையாகவுமிருக்கிறது.

அமைச்சர் காமராசர் எந்த இலக்கியத்தை—இலக்கியத்தை வரலாற்று நூல்களைப் படித்துள்ளார் என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

காமராசர் படித்த இலக்கியம் "டங்கா" டாமாசப, டப்பி சாமு, சக்கரப் என்பதைத் தவிர வேறு எதைப் படித்தார்.

இவர் கூறுகிறார் இலக்கியத்தில் இல்லை என்று. இலக்கியம் என்றாலே அது எப்படி இருக்கும் என்று கேட்கும் இவர் நம்மை கேலி செய்கிறார்.

மற்றொரு அமைச்சர் ராமையா கேட்கிறார், தமிழ் நா என்று பெயர் வைத்தால் சோறு கிடைக்குமா" என்று

இந்த மாநிலத்தின் சாபக்கேடோ, என்னவோ, நாம் எது சொன்னாலும்" சோறு கிடைக்குமா? சோறு கிடைக்குமா" என்று சோற்று பஜனை செய்கிறார்கள்.

அமைச்சர் காமராசரும் அப்படியே கேட்டிருக்கிறா. நான் கேட்கிறேன் அமைச்சர்களை, "சோறுகிடைத்தால் போதுமா? மானம் வேண்டாமா? சோறு தான் பெரிதா? "மானமிழந்தபின்வாழமாட்டான் தமிழன்" என்ற தமிழ்பரம்பரையில் வந்த அமைச்சர்கள் மானத்தைப் பற்றிக் கவலை இல்லாது பேசுகிறார்கள்.

காலஞ்சென்ற கவிஞர் பாரதியாரின் விழாவை சமீபத்தில் தான் கொண்டாடினார்கள். அவரின் வீரத்தையும், தமிழ் பற்றையும் புகழ்ந்து, முழக்கினார்கள்! அந்த பாரதியார் பாடியதைக்கூட இந்த அமைச்சர்கள். மறந்து விட்டார்கள்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று மிக அழகாக, உணர்ச்சி பெறும் வகையில் பாடி இருக்கிறார் இதை மறந்து நமது அமைச்சர்கள் வாயில் வந்ததை எல்லாம் பேசுகிறார்கள்.

ஒரு அமைச்சர் கூறுகிறார் சென்னைக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் சூட்டுவதால் என்ன வரும்" என்று நான் அவர்களுக்குக்கூற ஆசைப்படுகிறேன்

பாரதியார் கூறியுள்ளபடி "இன்பத் தேன்வந்து காதினில் பாயும்",

"நம் வரலாற்றுச் சிறப்பையும், நம்முடைய மன்னர்கள் ஆண்டதை நினைவு படுத்தவும் செய்யும்"

"நம்முடைய பண்டைய வீரத்தையும் பண்பையும், நாகரீகத்தையும் அகில உலகில் நமது புகழ் பரவி வந்ததையும் நமக்கு எடுத்துக் காட்டும்.

"நாம் ஆண்டவர்கள், இந்த நாடு நம்முடையது, அடிமையாக பிறரிடம் கெஞ்சி வாழ்கிறோம்' என்பதை எடுத்துக் காட்டும்.

இதைப்புரியாது 'தமிழ்நாடு என்று வைத்தால் என்ன வரும்' என்று கேட்கிறார்கள். மற்றும் ஒரு அமைச்சர் கேட்கிறார். "சென்னைப்பட்டினம்" என்பது மிகவும் நல்ல பெயர் என்கிறார். இவர்களது தமிழறிவையும் நாட்டைப் பற்றியும் நாம் என்னென்று மதிப்பிடுவது! "சென்னப்ப நாயக்கன்" ஒருவரின் பெயரால் வழங்கப்படுவது தான் "சென்னைப்பட்டினம்"

அந்த சென்னப்ப நாயக்கர் தமிழ்நாட்டை பலருக்கு அடிமைப்படுத்த உதவியவன், இந்த நாட்டை வெள்ளைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்டிக் கொடுத்தவன், அவன் பெயரால் இருப்பதை தமிழர்கள் மறுக்கிறார்கள்,—எதிர்க்கிறார்கள் அப்படி இருப்பது இழிவு என்று எண்ணுகிறார்கள்

தொல்காப்பியத்திலும், சங்க நூல்களிலும், இலக்கிய வரலாறுகளிலும் "தமிழ்நாடு" என்று கூறப்பட்டிருக்கிறது, அந்த வரலாற்றுப் பெயரைத் தான்—நமது மானத்தைக் காக்கும் பெயரைத்தான் சூட்ட வேண்டுமென்று கூறுகிறோம்

"எந்தப்பெயர் இருந்தால் என்ன? பெயரில் என்ன இருக்கிறது என்று கூறுகின்ற அமைச்சர்களைக் கேட்கிறேன் உங்கள் குழந்தைகளுக்கு இருக்கும் பெயரைமாற்றி, "குரங்கு, நாய், பன்றி எருமை" என்று வைப்பீர்களா? எந்தப் பெயரில் கூப்பிட்டால் என்ன? பெயர் தானே வேண்டும்? இதற்கு அமைச்சர்கள் சம்மதமா?

தங்கள் குழந்தைகளுக்கு கூப்பிடுவதற்கு அழகாகவும், இனிமையாகவும், மற்றவர்கள் கண்டு மகிழும் வண்ணமும் இருக்க வேண்டுமென்றுதானே அமைச்சர்கள் நினைப்பார்கள். அதுபோன்றுதான் நாமும் நமது நாட்டிற்கு நல்ல பெயர். நாம் விரும்பும் பெயர், நமதுவரலாற்றில் கூறும் பெயர் இருக்கவேண்டுமென்று சொல்கிறோம்

(8ம் பக்கம் பார்க்க)

Registered as a Newspaper in CEYLON
Regd. No. M. 7074 **MALAIMANI** விலை 16 காசு Phone 83285
வெளிநாடு 20 சதம்

முதன் மந்திரி பதவியிலிருந்து காமராஜர் திடீர் ராஜினமா?

சுப்பிரமணியம் பதவிக்கு நிரந்தர முழுக்கு?
பக்தவத்சலம் அங்குமிங்குமாக உலாவுகிறார்?

கக்கன் என்ன செய்வார்? ராமையா எங்கே போவார்?
ஐந்தாண்டுத் திட்ட அநீதி கண்டு மந்திரிகளின் ஏகோபித்த முடிவு இப்படி இருக்குமா?

"ஏகாதிபத்திய வெள்ளையர்களிடமிருந்து விடுதலை பெறுவோம். பல்லாயிர மாண்டுகளுக்கு முன் பிருந்தே சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்த பாரதத்தை மீண்டும் புதுப்பிப்போம், ராமராஜ்யம் காணுவோம், அசோக சகரவர்த்தியின் சக்ர நிழலிலே சுதந்திர இந்தியாவின் மணியாசனம் அமைப்போம்" என்று வீர முழக்கம் செய்த கதர்க்குல்லாய்கள் தான் இன்று ஆட்சிபீடத்திலே அமர்ந்திருக்கிறார்கள். வெள்ளையன் விரட்டப் பட்டான். ஹரி ஹரி ராம பஜனைப் பண்டாரங்கள் ஆட்சி பீடத்திற்கு வந்தார்கள்...

கண்ட பலன்?

ஐந்தாண்டு திட்டமே அகிலமெங்கும் பாரதத்தை வளமாக்கிக் காட்டச் செய்யும் திட்டம் என்று வாய்கிழியக கத்தினார்கள்!

ஐந்தாண்டு திட்டம் திட்டப் பட்டது! முதல் திட்டம் கழிந்தது. இரண்டாவது நிறைவேறியது, மூன்றாவது திட்டம் தீட்டப் படுகிறது. தீட்டப்படும் திட்டங்களால் பலன் யாருக்கு? அள்ளி அள்ளி வரிப்பணங்களைக் கொடுக்கும் தென்னகம் உரு பெறுகிறதா? ஓலைக்குடிசையிலே ஒப்பாரிவைக்கும் தென்னாட்டவர்களின் முகாரி டெல்லி சக்ராதிபதிகளுக்குக் கேட்கிறதா? பசிபசி என்று தினம்தினம் உயிரைவிடுப் மக்கள் வெள்ளம் குறைகிறதா? இல்லை! தென்னாட்டவர்களுக்குப் பலன் இல்லை!

எனவே தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு தீர்மானம் போடும் இந்த நேரத்தில் நாட்டு மக்களின் மேல் அக்கறை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் செப்டம்பர் திங்கள் 25ம் நாள், அக்டோபர் 10ம் தேதி முதல் 16ம் தேதி வரை ஐந்தாண்டுத் திட்ட அநீதி வாரம் கொண்டாட வேண்டுமென்று தீர்மானித்தது.

இதை நாட்டு நலனில் அக்கறை கொண்ட எல்லோரும் வரவேற்கிறார்கள், ஒரு சில, தமிழினத்திற்கே உரிய கருங்காலிகளைத் தவிர!

தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும். மங்களூரும் என்னவாயிற்று? என்ற கேள்விக்கு இங்கிருக்கும் கூலிப்படை மந்திரிகள் கூட பதில் சொல்ல முடியாமல் திருதிரு வென்று விழிக்கிறார்கள். 1957ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும், அதன் பிறகு நடந்த இரண்டு இடைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் மகாசிலர்கள் வாக்குறுதி கொடுக்கத் தவறவில்லை. ஆனால் அந்த வாக்குறுதி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட நிறைவேற்றப் படவில்லை!

இன்னும் சேலம் இரும்புத் திட்டம் கவனிக்கப் படவில்லை, புதிய ரயில்பாதைகள் தென்னகத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இல்லை!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரயில் பாதைகளுக்கு செலவிட்ட தொகையும் அதில் தென்னகத்திற்குக் கிடைத்த பங்கும் கீழே தரப்பட்டுள்ளது:

	1956 57	1957 58	1958 59	1959 60	1960 61
ரயில்பாதைகளுக்கு மொத்தத் திட்டம்	10,42	20,08	16,90	46,98	61,78
தென்னகத்திற்குக் கிடைத்தது	27	17	12	5	31

மொத்தம் 156 கோடி ரயில் பாதைகளுக்காக செலவிட்ட இரண்டாவதுஐந்தாண்டுத் திட்டத்தில் 92 லட்சம் தான் தென்னகத்திற்கு செலவிடப்பபட்டிருக்கிறது!

இதைத் தட்டி கேட்க தென்னகத்தில் ஒரு துணிவுள்ள அமைச்சர்களோ, அரசியல் கட்சிகளோ இல்லை!

இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல் முழங்கியது. தாசாதி தாசர்களும், கோளாகாதினரும் உணரத் தலைப்பட்டார்கள். தட்டுத் தடுமாறி தவறிப் போய்கூட காமராஜர் ஜென்மத்தோடு பிறக்காத சிந்தனையைக் கொஞ்சம் பெற்று உணர்ந்து கூறிவிடுகிறார்!

சுப்பிரமணியம் தேர்தல்கால நப்பாசை காரணமாகவோ என்னவோ திடீரென்று பிறந்த ஞானோதயத்தை வடித்து, அகில உலக மகா பராக்கிரம சக்தியைப் பெற்று போக்குவரத்து மந்திரிக்கும் தென் மண்டல குழுவுக்கும் அறிக்கை விட்டிருக்கிறார். ஆகஸ்டு 8ம் தேதி தென்னக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிக்கைவிட்டு அநியாயத்தை 'ஓகோ' என்று விளக்கி இருக்கிறார்.

சேலம்-பங்களூர் ரயில்பாதை திட்டமும் சாம்ராஜ்நகர்—கோயம்புத்தூர் ரயில்பாதைத் திட்டமும் மூன்றும் திட்டத்தில் இடம்பெற வேண்டும் என்று நிதி மந்திரி சுப்பிரமணியம்தனது அறிக்கையில் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறாராம்! இதை வரங்கொடுக்கும் தேவாதி தேவர்கள் கவனிப்பார்களா? அல்லது வழக்கம்போல தங்களது அலட்சியப் போக்கால்—ஆணவப் போக்கால் கேளாகாதினராகவே இருந்து விடுவார்களா?

உத்திரப் பிரதேச காட்டு வளம் அதிகரிக்க மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்படுவது 70 கோடி;

புதுடெல்லியில் ஆக்ரா சாலையில் 'துட் இபர்' டயர் நிறுவனத்தார் நிறுவ இருக்கும் 1000 பேருக்கு வேலை கிடைக்கும் டயர் உற்பத்தி தொழிற்சாலை 12 கோடி!

பீகார் மாநிலத்தில் யூகோஸ்லேவேகியா உதவியுடன் முப்பதாயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய இரண்டு தெர்மல் மின்சார நிலயங்களுக்கு முதலீடு 3·08 கோடி!

மத்திய பிரதேசத்தில் இரும்புக் கனி சுரங்கத்திற்கு 80 கோடி!

குஜராத்தில் மாஹிநதியில் மின்சாரம் எடுக்க செலவிடப்படுவது 20 கோடி!

அசாமில் உரத் தொழிற்சாலை மின்சார நிலையம் சிமெண்ட் தொழிற்சாலை மூன்றுக்கும் செலவாகும் தொகை 3 கோடி!

பீகார்—வங்க தாமோதர் பள்ளத்தாக்குக்கு ரூ. 200 கோடி!

உத்திரப் பிரதேச ரீ-கண்டு அணைக்கு 35 கோடி!

பம்பாய்—கொய்னா அணைக்கு 33 கோடி!

பீகார் கோஸி அணைத் திட்டம் 66 கோடி!

(4ம் பக்கம் பார்க்க)

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை-14.